Registered at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி.

SANMARKA POTHINI

பத்திரிகைவிலைவிகிதம்
இலங்கைக்கு சதம் ...
இந்தியாவுக்கு சதம் ...
பிறதேசங்களுக்கு ...

விளம்பரவிலைவிகிதம்
வரி ஒன்றுக்கு சதம் 10
... க்குமேற்படின் ... 9
... க்கு மேல்........ 8
இணைப்பிரசுரமொவ்வொன்றிற்கும் ...

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற் பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every other Tuesday

VOL. XXXII. JAFFNA June 13th 1916 No 12

கஉம் புத்தகம் யாழ்ப்பாணம் ககூகரும் ஆனி மீ ககஉ செவ்வாய்க்கிழமை சங்கியை கஉ

சுந்தரன் செய்த தந்திரம்.

(10ம் இலக்கப் பத்திரத்தொடர்ச்சி)

சுந்தர சோதிஷரின் கீர்த்தி இன்னும் அதிகமாய் வளரிப்பரம்பவே அடுத்த செவ்வாய்க்கிழமை திரள்திரளாய் வண்டிகளிலும் பாதசாரிகளாயும் சனங்கள்வந்து குவிந்துவிட்டனர். அத்தருணம் வந்தவர்கள் தலைவாயிலிருக்க இடம் போதவில்லை. என்றாலும் அதன்முன் துண்டுகொடுத்த 25 பேரையன்றி மற்றையோரை வெள்ளிக்கிழமை வரும்படி தவணையிடப்பட்டது. அப்படியே சிலர் திரும்பிச்சென்றாலும் சிலர் இரட்டிப்புத்தொகை தருகிறோமென்று வேண்டிக்கொண்டமையால் வேறு 20 பேருக்கு 11 மணிக்குத் துண்டுகொடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. அப்படியே பலர் காத்திருந்தனர். துண்டுகொடுக்கப்பட்ட 25 பேருமே தலைவாயிலிலிருக்க இடம்பெற்றனர். சங்கதிகளை விசாரிக்குங் கூட்டாளிகள் "ஆரியப்பாவையானாலுங் காரியத்திலேகண்" என்றபடி தங்கருமத்திற் சிந்தைவைத்துப் பிரயாணிகளின் சங்கதியை விசாரிக்கத்தொடங்கினர். அப்படியே விசாரணைசெய்து முடிந்தவர்களை இலக்கநிரைப்படி அனுப்பிவிட்டுத் தமது [illegible] சுந்தரனுக்குத் தெரிவித்துவந்தனர். அவ்விதமேசாஸ்திரங்கேட்டுத் திருத்தியடைந்து 24 பேர்செல்ல ஓர்விவேகி தனக்குச் சொன்ன சாஸ்திரத்தில் சந்தேகமுற்று மற்றவர்கள் செல்வதையும் கூட்டாளிகள் ஓடியாடித்திரிவதையுங் கவனித்துக்கொண்டு பக்கத்திலின்றான். துண்டுகொடுப்பவன் 11 மணிக்கு வேறு 20 பேருக்குத் துண்டு கொடுக்கவே அவர்களுடனேயும் இக்கூட்டாளிகள் அவாவாய்ச் சம்பாஷிப்பதைப் பார்த்தான். அவருள் ஒருவனைச் சாடை காட்டிக்கூட்டிப்போய் நீ வந்தகருமத்தை ஒருவரிடமுஞ் சொல்லாதே, கேட்டால் வேறுவிஷயத்தைச் சொல்லிவிடு; சாஸ்திரம் கேட்டுமுடிவில் என்னையுஞ் சந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அதற்கு அவனுஞ் சம்மதித்துக் குறித்த முறைவந்தவுடனே சென்று சாஸ்திரியார்முன் நின்றான். அவனோ ஓர் வியாச்சியத்தைக் குறித்துக் கேட்கப்போனவன். சாஸ்திரியாரின் கூட்டாளிகளுக்கு என்வீடு திருடப்பட்டது, அதைக்கேட்கவே போகிறேனென்று சொல்லியிருந்தான். சாஸ்திரியாரா அவனைநோக்கி உன்வீடு திருடப்பட்டது. அதைக் கைத்டியிலிருந்துவந்த கள்வர் திருடிப்போயினா என்றார். அதைக் கேட்டவன் "ஆத்திரகாரனுக்குப் புத்திமட்டு" என்றபடி நான்கேட்கவந்தது வியாச்சியத்தைக்குறித்தே! உமது காரியகாரர்க்கும் என்னைப் பிய்த்துப் பிடுங்கி கதைகேட்டபோது என்வீடு திருடப்பட்டதென்றேன். அதையே நீரும்சொல்லுகிறீர் என்றான். சாஸ்திரியாரோ நான்தெட்டமலா சொன்னேன், உனது கிலம் வேறொருவனுற் திருடப்படவில்லையா என்றார். அதற்கவன் ஆமென்றான். அதைக்குறித்துக் கள்ளச்சாதனம் பிறப்பிக்கப்படவில்லையா என்றார். அதற்கும் ஆம் என்றான். பின்னை நான் சொன்னதில் தவறேது. உன் ஆஸ்தியைத்திருடினவர்கள் வீட்டைக் கொள்ளையாடினவர்களல்லவா? கள்ளச்சாதனம்பிறப்பித்தவர்கள் கைத்டியாரெனப்பட்ட திருட்டுக்கைகளல்லவா? நான் சொன்னது உண்மையல்லவா? சாஸ்திரம் அவரவர் மனதின் சிந்தனையையுங்குறிக்கும். நீ ஒருவனை ஏமாற்றச் சொல்லியசொல்லு உன் இதயத்திலும் பதிந்திருந்தமையால் அதைக்குறிக்கும்படியே உன்நினைவையுங்கலந்துசொன்னேனென்றுசமாளித்து அனுப்பிவிட்டான். இவன் வருகையைக் காத்திருந்தவன் நடந்த சங்கதிகளையெல்லாம் விசாரித்தறிந்தபின் சமீபித்துவந்து கூட்டாளிகளையுங்கண்டு நீங்கள் வந்தவர்களிடம் சங்கதிகளைக் கேட்டறிந்தபின் கோடிப்பக்கமாய்ப் போவதேன் என்றான்? நாங்கள் தாகசாந்திசெய்யவும் சலமலோபாதை நிவிர்த்திசெய்யவும் போனோம், நீயேன் இணுக்கமாய் விசாரிக்கிறாய் உன்பாட்டிற்போ என்றார்கள். என்றாலும் அவனுக்குச் சந்தேகம் பிறந்துவிட்டது.

(வரும்)

லோட் கிற்சினர்.

அங்கிலோ யுத்தசேனாபதியும் சென்றவிடமெல்லாம் செயஸ்தம்பம் நாட்டினவரும் மங்காப்புகழுடையருமான இப் பராக்கிரமசிங்கமும் காலன்வாய்ப்பட்டதைக்கேட்பது அங்கிலோ அரசின்கீழ் விசுவாசத்துடன்வாழும் பிரசைகள் யாவருக்கும் மிகு வியசன சங்கதியே!

இம் மகா திரபுருடன் 1850ம் ஆண்டு பிறந்தார். 1870ம் ஆண்டு பிரான்சருக்கும் செர்மனியருக்குஞ் சண்டைநடந்தபோது பிரான்சியர் பக்கத்தில் யுத்தவீரனாய்நின்று போர்புரிந்தார். 1871ம் ஆண்டு பிரித்தானிய இஞ்சினியர்படையில் ஓர் [illegible] உத்தியோகஸ்தரானார். அவ்வருடத்திலேயே ஆசியாத் துருக்கியிலுள்ள பலஸ்தீன்நாட்டிற்கு அனுப்பப்பட்டார். அதுமுதல 27 வருடம் பலஸ்தீனிலும் எசிப்திலுமாய்ச் சேவகஞ்செய்து 1898ம் ஆண்டு ஒம்டர்மனில் கலகம் விளைத்த மகதியரை எதிர்த்துத் தோற்கடித்துக் கீர்த்திபெற்றார். அதற்காகப் பிரித்தானிய பார்லிமெந்தால் 30 ஆயிரம் பவுண் உபகரிக்கப்பெற்றார். அக்காலத்தில் செகுவ் அரசின் சேனையைத் திருத்தியமைப்பதற்காகப் பிரித்தானியரால் உதவப்பட்டார். பின்பு தென்னாபிரிக்காவில் போவர் யுத்தமுண்டாகவே அதில் பிரித்தானிய சேனாபதியாயிருந்த லோட் றபேட்சின் தலைமை உத்தியோகஸ்தரானார். அவர் இங்கிலந்துக்குப்போகவே இவரே சேனாபதியாகி மிகுதி யுத்தத்தைநடத்தி 1900 ஆண்டு செயம்பெற்றார். இந்தயுத்தத்தில் அவர்க்கு வைக்கவுண்டு பட்டமும் 50 ஆயிரம்பவுணும் உபகரிக்கப்பட்டன. 1902ம் ஆண்டு லோட் கிற்சினர் இந்திய சேனைபதியானார். அத்தருணம் இராசப்பிரதிநிதியாயிருந்த லோட் கர்சனுக்கும் இவருக்கும் அபிப்பிராயபேதமுண்டாக இருவரும் மேலரசுக்கு முறையிட்டுக்கொள்ளவே லோட் கிற்சினரையே அரசு ஆதரித்தது. பின்பு இந்தியசேனை அமைப்பில் பல திருத்தங்களைச்செய்தார். பின்பு மத்தியதரைக்கடலிலுள்ள குடியேற்றநாட்டுச் சேனாபதியாய் ஒருவருஷமிருந்தார். பின்பு எசிப்துக்குப் பிரித்தானிய எசன்றாய்ப் போய்ச்சேர்ந்து இப் பெரியயுத்தம் ஆரம்பமாகுமவரையில் அங்கேயே இருந்தார். யுத்தம்ஆரம்பித்தவுடன் யுத்தமந்திரியாய் நியமனம்பெற்று மிகு கெட்டித்தனமாய் அலுவல்பார்த்துவந்திருக்கிறார். இவர் இராப்பகலாய் உழைத்ததின்பலனாயப் போதிய சேனைகளும் யுத்த தளபாடங்களும் நம்மரசாட்சியாருக்குக் கிடைக்கும்படிசெய்து யுத்தத்தைச் செயத்துடன் முடிவுக்குக் கொண்டுவர வழிதிறந்துவிட்டார். இவர் ரூசிய சக்கிரவர்த்தியால் அழைக்கப்பட்டு விசேஷ பொருளாதார நிலைமைகளையும் யுத்த நடபடிகளையுங் குறித்து ஆலோசிப்பதற்காகச் சென்ற 31உ இரவில் ஹாமப்ஷைர் என்னும் குரூசாக்கப்பலில் புறப்பட்டு ரூசியாவுக்குப் போகும்வழியில் வடகடலில் ஸ்கொத்லாந்துக்குவடகிழக்கிலிருக்கும் ஆர்க்னீதீவுகளுக்கப்பால் சுரங்கத்திற்பட்டோ டொர்பிடோவெடியால் தாக்கப்பட்டோ தமது கூட்டாளிகளான உத்தியோகஸ்தருடன் அழிவாய்ப்பட்டார். இச்செய்தி அங்கிலோ பிரசைகளுக்கு மின்னிடிபிடித்தவாறாயிற்று. லண்டனில் சத்துருஉளவாளி ஆரோ இருப்பதாய் இச்சம்பவத்தால் நம்பப்படுகிறது. இந்த வீரசூர தளபதியின் மரணத்தால் நாமும் மிக வியசனமுறுகிறோம்.

விருத்தம்.

தென்னாபிரிக்க திசைமேவிமிக்க
 செயமாலைசூடுமெகிபா
பின்னுகவீந்திய வரசாட்சியுத்த
 பிரதானியானபொருநா
இன்னுளிலினர் வலியேயடக்கவென
 யாவுஞ்செய்தகிற்சின
மன்னுவுன்னெண்ண நிறைவேறுமுன்னர்
 மறுலோகமுறைதன்முறையோ.

யாழ்ப்பாணம்.

வர்ச்சிர்—தென்றற்காற்று மறுபடியுந் தலைகியிர்த்தி நிற்கிறது. "கடுங்காற்று மழைகாட்டும்" என்றபடி மழைத்தூறலும் இடையிடையே தோற்றுகிறது. ஊரில் சின்னமுத்தாதிய ரோகங்களுண்டு. அதனால் சிறுவருக்கு மரணமுஞ் சம்பவிக்கிறது.

மகிமைப்பட்டங்கள்—அரசரின் சென்னதினத்தில் நமது தேசாதிபதியவர்கள் பலருக்கு மகிமைப்பட்டங் கட்டினார். நம்மவருள் டிப்பியுத்திப்பிஸ்கால் ஸ்ரீ எஸ். சபாரத்தினமுதலியாரவர்களுக்கும் கொழும்பில் ஸ்ரீ ஞானசேகரம் சண்முகம் அவர்களுக்கும் மட்டுக்களப்பில ஸ்ரீ சி. [illegible]த்தையா அவர்களுக்கும் சமா[illegible]னநீதபதி என்னும்பட்டமும். [illegible] மணியம் ஸ்ரீ எம். முத்துக்குமாரு அவர்களுக்கும் முல்லைத்தீவு [illegible] ஸ்ரீ [illegible] உடையார் [illegible] பட்டமும் [illegible] லோக்கல் [illegible] சங்கிலிக்கார் ஸ்ரீ சி. வல்லிபுரம் அவர்களுக்கு [illegible] நகரசங்க [illegible] ஸ்ரீ எஸ். செல்[illegible] அவர்களுக்கும் முதலியார்ப்பட்டமும் [illegible] பட்டம்பெற்றவர்கள் அநேகருக்கும் சந்தோசஞ்சொல்லுகிறோம். [illegible]

தேசாதிபதியின்தரிசனை—நம் புதியதேசாதிபதியாகிய [illegible] அண்டசன் அவர்கள் தம் புத்திரனுடைய மனைவியாரோடும் பரிவாரங்களோடும் நுவரெலியவிலிருந்து விசேஷ றெயில்வண்டியிலே தலைமன்னார்வரையிலேசென்று மண்டபத்திலேயுள்ள காவலமண்டபங்களைப் பார்த்துத் திரும்பி 2உ சாயங்காலம் ஐந்தரைமணிக்கு யாழ்ப்பாண றெயில்வே ஸ்தேசன் வந்துசேர்ந்தார். இவர் வருகைக்காக றெயில்வே ஸ்தேசன்மாஸ்டர் மெஸ், கனகசபை அலங்காரஞ்செய்வித்து மேடைக்குக் கம்பளம் விரித்து எல்லாவற்றையும் வெகு சிறப்பாக வைத்திருந்தார். தேசாதிபதி வந்தபோது ஏசன்டர் மெஸ், ஹோர்ஸ்புரோ துரை முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களோடும் பெரியமனுஷர்களோடுங் காத்துநின்று உபசரித்தேற்றார். அங்குநின்றவர்களோடெல்லாம் ஏசன்டர் அறிமுகப்படுத்திவிடத் தேசாதிபதி அவர்களெல்லாரோடும் கைகுலுக்கி இராணிமாளிகைசென்றார். 3உ காலை தேசாதிபதி திருநெல்வேலியிலுள்ள மாதிரிப் புகையிலைத்தோட்டத்தைப்பார்த்துத் திரும்பி மறியற்கூடத்துக்குப்போய் இராசாவின் சென்னதினபெருநாட்பலனாக 250 மறியற்காரருக்கு மன்னிப்பருளி அவர்களையெல்லாம் விடுதலையாக்கிவிட்டார். அன்று சாயங்காரம் யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளையுஞ்சுற்றி இராணிமாளிகைக்குவந்து 86 பேருக்குப் பெருவிருந்திட்டு 4உ காலை மறுபடியுங் கொழும்புக்குப் பயணமாயினர்.

யாழ்ப்பாணச் சாராயக்குத்தகை—யாழ்ப்பாணச் சாராயக்குத்தகையை முந்தியகுத்தகைகாரனான ஸ்ரீ கதிரேசபிள்ளையவர்களால் 1915ம் ஆண்டு ஐப்பசிமீ 1உ தொடக்கம் 1917ம் ஆண்டு புரட்டாசிமீ 30உ முடிய 251535 ரூபாவாக வாங்கப்பட்டிருக்கிறது. சென்றவருடத்திலும் இவ்வருடம் இக்குத்தகை 14000 ரூபா மேலதிகமாய் விலைப்பட்டிருக்கிறது.

மரணசங்கதி—சமாதானநீதிபதி மகா ஸ்ரீ. T. C. சங்கரப்பிள்ளை அவர்களும் இறந்தோர்நிரையிற் சேர்க்கப்பட்டார். இவர் முதற்கிழமையும் யாழ்ப்பாணக் கோட்டுக்குப் போய்த் தங்கடமை பார்த்தவர். அரசாட்சி நியாய துரந்தரராயும் இடையிடையே நீதிபதியாயுமிருந்து தமதுகடமையை வழுவின்றி நடத்தியவர். இவர்க்காய்த் துயருறுபவருடனே நம்மனுதாபமு மிருக்கிறது.

அபாயமரணம்—இரண்டொரு தினங்களின்முன் பட்டினத்தில் தென்றற்காற்றால் ஓர் பனைமரம் முறிந்து வீட்டின்மேல்விழ அங்கு வளர்த்தப்பட்டிருந்த குழந்தையொன்று அதனுளகப்பட்டு நசிந்திறந்தது. காற்றுக்காலங்களில் வளவுகளிலுள்ளமரங்களைக்குறித்துவச்சரிப்பாயிருக்கவேண்டும்

தோய்திர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். தூர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்க ஒரு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங்கேளுங்கள்:— முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமாயிறங்குவது, மூத்திரம் நிறமாதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலகீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணாகி அசைக்க முடியாமற்போவது, மறதி, சாதாரண பலகீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், நீர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல் உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமோனால் மூத்திரப்பை ரோகமடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.



ஒரு புட்டி விலை, ரூபா.	2	0	0
6 புட்டியின் விலை, ரூபா.	10	8	0

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆண்டப்பிலியு. ஏச். ஷல்லர் துரையவரிடத்திலும் கிடைக்கும்.

இளைதிக்கற்பரீட்சை—டைலீலகைடைபெற்ற இளைதிக்கற்பரீட்சையில் 27 பேர் சித்தியடைந்தனர். இவர்களுள் 15 பேர் தமிழர்.

விவாகம்—யாழ்ப்பாணக் கச்சேரி முதலாம் கிளாக் ஸ்ரீ கிக்கலஸ் முதலியாரவர்களின் ஜேஷ்டபுத்திரனை மதுபரிபாலன உதவிச் சுப்பிரின்றன் ஸ்ரீ செல்வத்துரை கிக்கலஸ் அவர்களுக்கும் மானிப்பாயிற் காலஞ்சென்ற ஸ்ரீ பொன்னுச்சாமியவர்களின் புத்திரி ஸ்ரீமதி கற்பக இராசம்மாளுக்கும் சென்ற 7ஆ புதன்கிழமை விவாகம் நடைபெற்றது.

மானிப்பாயில் டக்டர் G. W. A. சுப்பிரமணியம் அவர்களின் குமாரத்தி விக்ரோரியா செல்லம்மாவுக்கும், கொழும்பில் ஓர் கொம்பனியில் கிளாக்காயிருக்கும் மெஸ். S. M. அல்பிறெற்றுக்கும் நேற்று சுவாமிதேவாலயத்தில் சுபந்தன விவாகச்சடங்கு நிறைவேறிறது. மணமக்கள் அட்டைஸ்வரியமும்பெற்றுப் பல்லாண்டுவாழப் பரனருள்வாராக.

இலங்கை.

சென்னைச் சுருணவிலாசசபை— இச்சபையார் கொழும்புக்குவந்து நாடகம்நடத்துகிறார்கள். இவர்கள் யாழ்ப்பாணத்துக்கும் வருவார்களாம்.

கொழும்புத்துறைமுகத்தில்அபின்கண்டுபிடிக்கப்பட்டது—லண்டனிலிருந்து கொழும்புக்குவந்த ஓர்கப்பலில் 58 இறாத்தல் அபின் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த அபின் கப்பலில் பலவிதமான பெட்டிகளில் மறைத்துவைக்கப்பட்டிருந்தது. சில சப்பாத்துகளுள்ளும் இது மறைத்துவைக்கப்பட்டிருந்ததாம்.

காலுபிள்ளைப்பிரசவம்—சென்றமீ 21ஆ அழுனுகம் என்னுமூரில் ஓர்ஸ்திரி காலுபிள்ளைகளைப் பெற்றுளென்றும் அப்பிள்ளைகளில்மூன்றும் தாயும்உடனே இறந்துவிட்டதாகவும் ஒருபிள்ளை உயிருடனிருக்கிறதாகவுஞ் செய்தி.

இராசாவின்சிலை—களுத்துறையிலேயிருக்கின்ற படிகாரமுதலியார் மெஸ், என்,டி. ஏ. சில்வா விஜசிங்கு ஜே. பி—யூ.பி.எம், என்பவர் தம்முடையசெலவிலே மாட்சிமைதங்கிய ஜோர்ஜ் அரசருடைய சிலை ஒன்றைச் சீமையிலே செய்வித்து எடுப்பித்திருக்கிறார். அது அரசர் மகுடாபிஷேகத்துக்கு உடைஅணிந்து நிற்கும்மாதிரியாகச் செய்யப்பட்டிருக்கிறது. வருகிற ஆடி மாசம் 22ந் திகதி தேசாதிபதி சமுகமாக நின்று சகல வைபவங்களோடும் களுத்துறையிலே அந்தச் சிலையை ஸ்தாபிக்கவிருக்கிறார்.

ஆலாங்கட்டிமழை—சென்றமீ 29ஆ பசறையிலே பெரிய ஆலாங்கட்டிமழைபெய்து விசேஷமாக வாழைகளுக்கும் வீட்டுக்கூரைகள் ஓடுகளுக்கும் பெரிய சேதஞ்செய்துவிட்டதாம்.

எழுநாதிகள்—மெசொப்பொத்தாமியாவிலே போர்க்களத்திலே காயமடைவாரை வைத்தியசாலையிலேவைத்துப் பராமரிப்பதற்காக இலங்கையிலிருந்து ஏழு வேடிமார் கப்பலேறிப் பயணமாகின்றார்கள்.

காலு கால் கைகளுள்ளபிள்ளை—பயக்கலாவிலே ஒரு ஸ்திரி பெற்றபிள்ளை காலு கால்களும் காலுகைகளுமுடையதாயிருந்ததாம். குழந்தை பிறந்த சிலநேரத்தாலிறந்துபோயிற்றும்.

தாவதண்டத்தண்டனை—கொழும்பிலே நடத்தப்படுகின்ற இஸ்லாம்மித்திரன் என்னும் பத்திரிகை ஐரோப்பிய பெண்களைக் காணப்போன இஸ்லாம் பெண்களைக்குறித்துத் தகாதவகையாய் அசப்பியமாகப் பேசித் தூஷித்தமையால் பத்திராதிபருக்கு கொழும்புப் பொலிசுக்கோட்டிலே மூன்றுமாசக் கடினவழியமதியலும் 50 ரூபாய் தெண்டமும் விதிக்கப்பட்டது, எதிரி அப்பல்கேட்டிருக்கிறார்.

யுத்த தந்தி.

பிரான்சிய பெல்சிய பிரித்தானிய போர்முனை.

31ஆ நேற்றிரவு சத்துருக்கள் பிரிகோட் நியூசப்பல் லாவென்டியிதுவன அரண்களைத்தகர்த்தார்கள். நியூசாபலில் விடாமல் 80 நிமிஷநேரம்சுத்தனர். அதன்பின் காலாட்படை சமதரண்களைப்பினக் தட்புகுந்தன, சத்துருக்கள் சிலைரக் கைதிகளாய்ப் பிடித்துக்கொண்டார்கள், ஆனால் சமதுஅரண்களை எதிர்க்கவந்தவர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள்.

ஆனி 2ஆ இன்று இப்பிரிவெதன்னபோர்முனையில் கடுஞ்சண்டைடந்தது; செர்மனியர் காலை மணி 15 நிமிஷத்தில் இடைவிடாமல் பெரிய பீரங்கிளால் தகர்க்க ஆரம்பித்தனர். அவர்கள் காலாட்படை சமதுபோர்முனையைப் பலவிடங்களிலினக் தட்புகுந்தது. மற்றைய இடங்களில் பின்தள்ளப்பட்டார்கள். நேற்றிரவு வைமிக்குன்றின் பள்ளாங்களை வெடிக்கச்செய்து அத்துடன் பீரங்கிப்பிரயோகமுஞ் செய்துகொண்டு செர்மனிய அரணைப்பினக் தட்புகுந்தோம். பின்பு சமது காலாட்படை பின்வாங்கிச்சென்றது.

நேற்று ஒரு சத்துருவிமானம் கீழேவீழ்த்தப்பட்டுப் பீரங்கியால் எரிக்கப்பட்டது. வேறொரு விமானமும் வீழ்த்தப்பட்டுச் சேதமாக்கப்பட்டது. சம்முடைய புகைக்கூண்டுகளிலொன்று காற்றிலடியுண்டு சத்துரு அரண்வரிசையில் வீழ்ந்தது. அதிலிருந்தவர் கீழேயிறங்குவதற்காயிருக்குஞ் சாதனங்களைக்கொண்டு சமதரண்வரிசையில் தரைக்குவந்துசேர்ந்தார்கள்.

3ஆ இப்பிரிசுக்குத் தென்கிழக்கே கடுஞ்சண்டைடந்தது. நேற்றுச் சாயந்தரம் ஆரம்பத்தில் கொஞ்சம் அனுகூலமடைந்ததினால் இரவில் சம்மை மென்மேலும் எதிர்த்து சமது பாதுகாப்புவரிசைகளில் 700 யார்வரை உள்நுழைந்தார்கள். அங்கிருந்த கனடியர் காலை 7 மணிக்குச் சத்துருக்களைத் திருப்பிஎதிர்த்து அவர்கள்வசப்படுத்திக்கொண்டிருந்த இடத்தின் பெரும்பாகத்திலிருந்து அவர்களைச் சிறிதுசிறிதாய் வெளியேற்றிவிட்டார்கள். கனடியர் பெரிய பீரங்கிப்பிரயோகஞ்செய்து சத்துருக்களுக்கு அதிகசேதம்விளைத்தார்கள். மாண்ட செர்மனியரின்பிரேதங்கள் அவ்விடத்திலேயே விடப்பட்டது. பிரிக்கோட்டுக்கருகே சமதரணுக்கெதிரில் ஓர் சிறியபடைவகுப்புச் செர்மனியருடன் சண்டைசெய்து சிலரைக் கைதியாய்ப்பிடித்துவந்தது. சமதுகட்சியாருக்குச் சொற்பசேதம். அவர்கள் செர்மனிய குழிகளில குண்டுகளை எறிந்தார்கள்.

4ஆ நேற்று சமதுபோர்முனை பீரங்கிகளால்தாக்கப்பட்டபோது அதைப் பார்க்கச்சென்ற ஜெனறல் சேர்சர் ஜெனறல் வில்லியம்ஸ் ஆகிய சேனாபதிகளிருவருங் காணப்படவில்லை.

5ஆ நேற்று 26 பிரித்தானியவிமானங்கள் முக்கிய ராணுவஸ்தலங்கள்மேல் குண்டெறிந்து சேதத்தைவிளைத்தது. ஒரு விமானம்மாத்திரம் சத்துருவரிசையில் கீழேவீழ்த்தப்பட்டது.

200 செர்மனியர் பிரிக்கோட்டில் சமதரண்களைப் பீரங்கிகளால் தகர்த்துக்கொண்டெதிர்த்தும் சேதத்துடன் பின்தள்ளப்பட்டார்கள். சேர் என்னுமிடத்துக்கருகில் ஓர் சிறிய பிரித்தானிய சேனை செர்மன் அரண்களில்நுழைந்து சிலரைக்கொன்று சொற்பசேதத்துடன் திரும்பிவந்தது. வேறொருசேனை மாஞ்சிக்காட்டிலும் சியூவிலிலும் சத்துரு அரண்களில்நுழைந்து விசேஷ சேதம்விளைத்துச் சிலரைக் கைதியாகப் பிடித்துக்கொண்டுவந்தது.

6ஆ லபாய்செல் என்னுமிடத்தில் சத்துருக்கள் பீரங்கிளாற்றகர்த்து சம்மை எதிர்த்துச் சொற்பசேதம் விளைத்தார்கள். ஆனால் பின்பு மாண்டுபோனவர்களையும் விட்டுவிட்டுப் பின்வாங்கிச் சென்றார்கள். குவெஞ்சியில் செர்மனியஅரண்களில் 5 இடங்களில் பிரித்தானியசேனைகள் புகுந்தன. இரண்டுகேட்சியார் 40 செர்மனியரைக்கொன்றனர்.

6ஆ இப்பிரிஸ்போர்முனையில் மிக்க கடுமையான சண்டை நடக்கிறது. கனடியருக்கும் செர்மனியருக்கும் அதிகசேதம். கணக்குவழக்கின்றி அனேகருண்டுகள் செலவழிந்தன. கனடியர் மிகுதி ரக்காட்டி முன்னிழந்த அரண்களைக் கைப்பற்றினர் அரண்கள் பாழாயின பிணங்கள்குவியலாய்க்கிடக்கது. அந்த இடத்தைவிடாமல் தங்க கனடியருக்குக் கூடாதிருந்தது.

7ஆ இப்பிரிசுக்குக்கிழக்கே பகலில் கடுஞ்சண்டைடந்தது. சத்துருக்கள் 2000 யார் விஸ்தாரமான போர்முனையில் பகல் மூன்றுமணிமுதல் நாலரை மணிக்குள் பல சுரங்கங்களை வெடிக்கச்செய்து பின்பு காலாட்படையைக் கொண்டெதிர்த்தும் சற்றும் பலனடையவில்லை, கூஜி என்னும் இடத்துக்குவடக்கில் சுரங்கங்களை வெடிக்கச்செய்து முன்பாக அரணுள்நுழைந்தார்கள். சண்டைடக்கிறது. சமது முக்கியஅரண்வரிசை அசைக்கப்படவில்லை. ராக்ஸினின்கோட்டுக்குவடக்கே சத்துருக்கள் தற்காப்புக்காக வைத்திருந்த சுரங்கத்தை காம் வெடிக்கச்செய்து அவர்கள் அரண்களுக்கு மிகு சேதத்தைவிளைத்தோம். நேற்றிரவு சமதுகட்சியார்சிலர் செர்மன் அரண்களில் மூன்றிடங்களில் நுழைந்து அதிலிருந்தவர்களைச் சேதம்விளைத்துக் குண்டுகளை எறிந்து சிலரைக் கைதிகளாயும் பிடித்துவந்தனர், சத்துருக்கள் தணதபீரங்கிகளால் தாக்குகிறார்கள். கூசி என்னுமிடத்தில் பாழானபாகத்தில் சமது முன்பக்கஅரண்களைப் பிடித்துக்கொண்டார்கள். மிருதிப்பாகங்களை எதிர்க்க எண்ணியும் பலனடையவில்லை. பாஸிரினியா காட்டுக்குக் கிழக்கேயுள்ள செர்மனியஅரணில் இரவில் ஆஸதிரேலியபடைபுகுந்து சேதம்விளைத்துப் பலரைக் கைதிகளாயும் பிடித்துவந்தது. குவெஞ்சியில் பலனடையத்தக்கதாய்ச் சத்துருக்களை எதிர்த்தோம்.

௨ஆ சென்ற 24 மணிநேரமாக வைமிக்குன்றுக்கும் லாபாஸிக்கால்வாய்க்குமத்தியில் ஆறு சுரங்களைவெடிக்கச்செய்து சற்பலனடைந்தோம் இப்பிரிசில் உக்கிரமான சண்டைடக்கிறது பிலேரி லிப்பீக் என்னுமிடங்களில் இராப்பகலோயாதசண்டைடப்பதால் அவ்விடங்களுக்கு மேலேஆகாயத்தில் நெருப்புவெளிச்சமாய்க்காணப்படுகிறது இருகட்சியிலும்விசேஷசேதமுண்டாயிருக்கிறது

பிரான்சு பெல்சிய வேர்டன்சண்டை.

30ஆ பிரான்சர் மும்முரமான சண்டைசெய்தபின் கூமியாலகிராமத்தின் மேற்பாகத்தில் உள்நுழைந்தார்கள், எதிரிகள் பலமாய்த்தாக்கியதைத் தாங்கிக்கொண்டு வடமேற்கிலிருந்த அரண்களைப் பிடித்துக்கொண்டார்கள். மார்த்தோம்க்குத் தென்மேற்கிலும் முதலாய் அரண்களைப்பிடித்தனர். செர்மனியர் டொறுமாண்டுக் கோட்டையைச்சுற்றியிருந்த அரண்களை எதிர்த்தும் பின்தள்ளப்பட்டார்கள்.

வேர்டன்குபதியில்கடக்கும் 101ம் நாட்சண்டையில் சத்துருக்கள் உக்கிரமாய்எதிர்த்தார்கள். மார்த்தோம்குன்றின் மேற்பக்கத்தில் சமதுபடை ஸ்தாபித்திருக்கும் இடங்களில் சத்துருக்கள் தாக்கினபோதெல்லாம் பின்னிடச்செய்யப்பட்டார்கள், காமொரைவுட்காட்டுப்பகுதியில் சத்துருக்கள் பயனின்றி சம்மைத்தாக்க எத்தனித்தனர். சமது போர்முனையின் மூன்பாகத்திருந்த பெதின்கோட் கூமியாஸ் றோட்டுக்குத்தெற்கே காம் பின்வாங்கிச்செல்லும்படி நேரிட்டது.

31ஆ வேர்டனில் முன்னில்லாத உக்கிரமாகச் சண்டைடக்கிறது. பலவிடங்களில் அவர்கள் இரண்டுதினங்களாய் உக்கிரமாய்ப் பீரங்கிகளால் திருப்பித்திருப்பி எதிர்த்தும் காம் பின்தள்ளிவிட்டோம். ஆயினும்காரேட்ஸ்காட்டுக்குத்தெற்கேயுள்ளபகுதியில் செர்மனியர் பீரங்கிளாற்றகர்த்துத் சமமட்டமாக்கிவிட்ட சமது முதல்வரிசை அரணை காம் விட்டுவிடும்படிநேரிட்டது. கூமியாஸ்கிராமத்திற்குத்தெற்கே சம்மை இருபக்கத்திலுஞ் செர்மனியர்தாக்கி முதலில் சம்மைச் சாட்டன் கோட்டைநோக்கிப் பின்னிடச்செய்தார்கள். ஆனால் காம் திருப்பியெதிர்த்து கூமியாஸ் எல்லைவாயில் துரத்திவிட்டோம். செர்மனிய படைவகுப்புகள் மூடுபனியில் மியூஸாநிக்கரையோரமாய்ச் சென்றும் அவை சாட்டன்கோட்டுக்குச்சமீபத்தில் நாசமாக்கப்பட்டன. அல்செங்கேற்குப்பகுதியில் சிறிதுஇடத்தை வசப்படுத்தியும் உடனே அப்புறப்படுத்தப்பட்டார்களென்று பிரான்சிய அறிக்கை கூறுகிறது.

ஆனி 1ஆ பகலில் சமதுசேனைகள் மார்த்தோம்குன்றின் தென்மேற்குச்சரிவிலிருக்கும் ஓர் பலமான செர்மனிய அரணைத்தாக்கிப்பிடித்துக்கொண்டது. தென்கிழக்குச்சரிவில் இரவில் சத்துருக்களைத் திடீரென்று எதிர்த்து 25 பேரைப்பிடித்தோம். சாயந்தரம் மார்த்தோம்குன்றின் கிழக்குப்பக்கச்சரிவை எதிர்த்தபோது பின்னிடும்படிசெய்யப்பட்டார்கள். டொறுமாண்டுக்கோட்டைக்குக் கிழக்கிலும் மேற்கிலும் பீரங்கிச்சண்டை உக்கிரமாய்நடக்கிறது.

பிரான்சஆகாயப்படை தியானவில்லூக்கும் மெட்சுக்கும் மத்தியிலுள்ள றெயில்பாதைகளின்மேலும் உணவுப்பொருட்சேகரக் கட்டிடமேலும் குண்டுகளை எறிந்தது.

2ஆ டொறுமாண்டுக்கோட்டைக்குத்தெற்கே கெயிலெட்வுட்காட்டின் பெரும்பாகத்தைச் சத்துருக்கள் பிடித்துக்கொண்டு நுழைந்து வாஸ்கிராமத்திற்கும் குளத்திற்கும்போய்ச் சேர்ந்தார்கள், ஆனால் அவர்கள் எதிர்த்தபோதெல்லாம் பின்தள்ளப்பட்டார்கள். மியூஸ்நதியின் இடக்கரையில் சத்துருக்களின் போக்குவரவு அரணில் 110 யார் தூரம்வரை காம் முன்சென்றோம். ஒரு சத்துரு பாக்ர்விமானமும் வேறொர்விமானமுங் கீழேவீழ்த்தப்பட்டன.

டொறுமாண்டுக்கோட்டைக்கும் வாஸ்கிராமக்குளத்திற்கும் மத்தியிலுள்ள சமது முதல்வரிசை அரணைப்பிளந்துகொண்டு சத்துருக்கள் உட்புகுந்தார்கள். மற்றிடங்களில் சமது மெசின்பீரங்கிகளால் சத்துருக்களுக்கு அதிக சேதம்விளைத்துப் பின்னிடச்செய்தோம்.

பகலில் பார்லிடக்கர்மேல் செர்மனிய ஆகாயபடை சிலகுண்டுகளை எறிந்தது. 2 ஸ்திரிகளும் குழந்தைகளுமுட்பட 18 பேர் கொல்லப்பட்டனர். 6 ஸ்திரிகளும் 11 குழந்தைகளுமுட்பட 25 பேர் காயப்பட்டனர்.

வாஸ்கோட்டையைப்பிடிக்கச் சத்துருக்கள்முன்னிலில்லாத உக்கிரமாய்த்தாக்கினர். முதற்றுத்தனமாய் எதிர்த்துவந்தவர்களை சமதுபீரங்கிகள்தடுத்து அடக்கிவிட்டன. சத்துருக்களாலனுப்பப்பட்ட துணைப்படைகள் சமது பீரங்கிகளுக்கு தெதிர்நிக்கி டிப்கரைநோக்கிப் பின்னிடும்படி செய்யப்பட்டது.

டாம்லூப்கிராமத்தில் சத்துருக்கள் நுழைந்தார்கள். அதன்பெரும்பாகம் சமதுவசத்திலேயேயிருக்கிறது, சண்டை உக்கிரமாய்நடக்கிறது.

4ஆ சாயந்தரம் சத்துருக்கள் டான்லூப்புக்கும் வாஸ்கோட்டைக்கும் மத்தியிலுள்ள பள்ளத்தாக்கில் சம்மைப் பலமாய்த்தாக்கி சமதரண்களில் சிலதை வசப்படுத்திக்கொண்டனர். ஆனால் திருப்பி எதிர்த்து அவர்களை அப்புறப்படுத்திவிட்டோம். மியூஸ்நதியின் வலக்கரையிலிருக்கும் சத்துருக்கள் டான்லூப் வாஸ்பகுதியைச்சுற்றியுள்ள இடங்களையும் வாஸ்கோட்டையையும் பீரங்கிகளால் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். பகல் மூன்றுமணிக்கு அக்கோட்டைக்குவடமேற்கே சத்துருக்கள் மெசின்பீரங்கிகளைப் பிரயோகஞ்செய்து சம்மைத்தாக்க எத்தனித்தார்கள், சமது கனதபீரங்கிகள் காவுட் எவ்டோர்லும்காட்டில் மூன்று சத்துருப் பீரங்கிப்படையை நன்றாய்ச்சேதமாக்கின. பகலில் ஓர் செர்மன் ஆகாயவிமானம மேல் என்னுமிடத்தில் சிலகுண்டுகளைஎறிந்து 6 பேரைக்கொன்று 10 பேரைக் காயப்படுத்திற்று, ஒரு பிரான்சிய ஆகாயவிமானப்படை சத்துருவிமானங்களைப் பின்தொடர்ந்து ஒன்றைப் பிரான்சியபடைவரிசையிலும் வேறொன்றைச் சத்துருப்படைவரிசையிலும் கீழ்வீழ்த்தின.

3ஆ வாஸ்கோட்டையைச்சுற்றிய பிரதேசத்தில் கடுமையான சண்டைடக்கிறது. அதற்கு மேற்கிலும் கிழக்கிலும் சத்துருக்கள் சம்மை எதிர்க்க எத்தனித்தபோதெல்லாம் பின்தள்ளப்பட்டார்கள். சமதுபீரங்கிகள் விசேஷசேதத்தை விளைத்துக்கொண்டிருக்கையிலும் அவர்கள் அக்கோட்டையை உக்கிரத்துடன் தாக்கிக்கொண்டிருக்கனர். சத்துருக்களின் சிலகட்சிகள் அக்கோட்டைக்கு வடபக்கத்திலிருக்கும் அகழில்நுழைந்தன. கோட்டையின் உட்புறத்திலிருந்து காம் தைரியத்துடன் சத்துருக்களை எதிர்த்துக்கொண்டிருக்கிறோம்.

5ஆ வாஸ்கோட்டைக்கு வடக்கே இரவில் சத்துருக்கள் வலுவாயெதிர்த்தும் பலனடையவில்லை. சத்துருக்கள் விஷக்காற்றைப் பிரயோகித்து உக்கிரமாய் எதிர்த்தும் தடுக்கப்பட்டனர்.

6ஆ சத்துருக்கள் வாஸ்கோட்டையை உக்கிரமாய்த் தகர்த்துக்கொண்டிருக்கிறார்கள். நிலமை மாறுதலடையவில்லை.

7ஆ இடைவிடாமல் வாஸ்கோட்டையைத் தாங்கின்ற பட்டாளத்தலைவனான ரேனல் என்பவர் "கமாண்டர் ஒவ் தி லீசன் ஆப்ஹனர்" என்னும் பதவிக்குயர்த்தப்பட்டார்.

8ஆ செர்மனியர் செவ்வாய்க்கிழமை சாயந்தரம் வாஸ்கோட்டையைப் பிடித்துக்கொண்டதாக வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்று காலமணிவரையிலும் அக்கோட்டை சமதுவசத்திலேயேயிருந்தது. ஆனால் சத்துருக்கள் மிக உக்கிரமாய்ப் பீரங்கிப்பிரயோகஞ்செய்துகொண்டிருக்கிறபடியால் அதுமுதல் காம் அக்கோட்டையுடன் போக்குவரவுசெய்வது கஷ்டமாயிருந்தது.

8ஆ பாழடைந்தவாஸ்கோட்டையைச் சத்துருக்கள் பிடித்துக்கொண்டிருனால் அவர்களுக்கு மிருசேதம். ஆனால்வேர்டன்கோட்டையைப்பிடிக்கச்சமீபத்திலும்வரவில்லை.

நருவாரமாகத்தனித்துநின்று பாழடைந்த வாஸ் கோட்டையை வசப்படுத்தினும் அக்கோட்டைக்கு வலஇடப்பக்கஅரண்களையும் கோட்டைக்குச்செல்லும்வழிகளையும் சமது வசத்திலேயே வைத்திருக்கிறோம் அவைகளைநோக்கிச் சத்துருக்களெதிர்த்தும் பீரங்கிப்பிரயோகஞ்செய்து பின்தள்ளிவிட்டோம்.

8ஆ வாஸ்கோட்டையை முற்றுக்கையிட்டிருந்த படையைச்சேர்ந்த மிகுதிப்பேர் நிலவறைகளில்புகுந்து செவ்வாய்க்கிழமை சாயந்தரந்தான் சமக்குப்பணிந்ததினால் தாமதமாய்ச் சங்கதியை வெளிவிட்டோமென்று செர்மனியர் சொல்லுகின்றனர். இந்தக்கோட்டையைப்பிடித்த படைத்தலைவருக்கு போட்மெரிட்பட்டத்தைச் செர்மன் சக்கிரவர்த்தி அளித்தார்

9ஆ செர்மனியர்தம்முழுப்பலத்தையும்பயோகித்துடொறுமாண்டுக்கோட்டையையும்வாஸ்கோட்டையையும்பிரித்து இரண்டரைமைல்தூரம்கட்புக 104 தினங்கள்சென்றன வாஸ்கோட்டை கடின பீரங்கிப்பிரயோகத்திற்கு 90 நாள்கடுகொடுத்துநின்றது இப்போதும் அதன் பிரதானமான பாகத்தைச் செர்மனியர் பிடிக்கவில்லை வாஸ்கோட்டை 1150 அடிஉயரமுள்ளது அதன் மேட்டின் சிகரம் 1275 அடி, அதன்சிகரத்தில் கவில்லன்னும்கோட்டைஇருக்கிறது அதற்குப்பலமாய் டாவெனஸ ப்ராய்டேடேர்க் கோட்டைகளிருக்கின்றன செர்மனியர் அவைகளையும்பிடிக்கில் பலத்தசேதமடையவேண்டும்

பெரிய கடற்சண்டை.

ஆனி 2ஆ தென்மார்க்குதேசத்துக்கு மேற்கில் 31ஆ பின்னேரம் கப்பற்சண்டை நடந்தது குருசர்க்கப்பல்களே முக்கியமாய்நின்று சண்டைசெய்தன அப்படையில் சில சண்டைக் குருசர்க்கப்பல்களும் சிறிய குருசர்களும் விரைவாய்ச்செல்லக்கூடிய காலு சண்டைக்கப்பல்களு மிருந்தன இப்படைக்கு அதிகசேதம் வெளிச்சம் நன்றாயில்லாமலிருந்தது செர்மன் சண்டைக்கப்பல்களுக்கு அநுகூலமாயிருந்தது நீடித்த சண்டைசெய்யாமல் செர்மன்கப்பல்கள் திரும்பிப்போய்விட்டன போதுமுன் சமதுகப்பல்கள் அவைகளை மிகப்பழுதாக்கின குவீன்மேரி, இண்டிபெடிக்பிள், என்ற சண்டைக் குருசர்க்கப்பல்களும் பிளாக்பிரின் என்ற குருசர்கப்பலும் முழுகடிக்கப்பட்டன வாரியாஎன்ற குருசர் பழுதாகி அதை இழுத்துப்போகையில் கடுக்கடலில விடவேண்டியதாயிற்று டிப்பேரி, டர்புலென்டு, பார்குன், ஸ்பாரோஹாக், ஆர்டென்டு என்ற டிஸ்திரோயர்க்கப்பல்கள் கட்டமாயின வேறு 5 டிஸ்திரோயர்கப்பல்கள் என்னவாயிற்றென்று தெரியவில்லை சத்துருக்களின சேதம் அதிகம் சண்டைக் குருசர்ஒன்று கட்டமானதும் வேறொன்று சேதமானதும் நிச்சயம் இராத்திரி நடந்த சண்டைஒன்றில் செர்மன்யுத்தக்கப்பலொன்றை சமது டிஸ்திரோயர்கள் முழுகடித்ததாய் [illegible] இன்னும் சில சிறு குருசர்களில் இரண்டு பழுதாக்கப்பட்டதாகவுந் தெரிகிறது

3ஆ சமது டிஸ்திரோயர்களில் 8 சேதமாயிற்றென்று கடற்படைப்பகுதியார் தெரிவித்தனர்

செர்மன் சண்டைக்கப்பலொன்று பிரித்தானிய டிஸ்திரோயரால் தாக்கப்பட்டபோதுவெடித்துப்போயிற்று வேறொரு டிரெட்னட் என்ற பெரிய சண்டைக்கப்பல் சமது பீரங்கிப்பிரயோகத்தால் மூழ்கடிக்கப்பட்டன அவர்களின் சண்டைக் குருசர்களிலொன்றுவெடித்துப்போயிற்று வேறொன்றுபழுதாய்விட்டதுஒன்றுதிரும்பிப்போகையில் நின்றுவிட்டதாய்த்தெரிந்தது சத்துருவின் சிறிய குருசர்க் கப்பல்களிலொன்றும் ஆறு டிஸ்திரோயர்களும் மூழ்கடிக்கப்பட்டன வேறு இரு சிறுக்குருசர் பழுதாயின மூன்று செர்மன் சண்டைக்கப்பல்கள்மேல் குண்டுகள் பலமுறைவிழுந்த வடுக்கள் காணப்பட்டது செர்மன் சப்மரீனும் ஒன்று மோதப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது

சத்துருவுடன் சண்டைசெய்யவேண்டிய பிரித்தானியகப்பல்கள் சத்துருவின் கடலுட் புகுந்தன சமது பலவீனமுள்ளபடை செர்மன் முழுப்படையுடன் சண்டைசெய்தது அவைகள்கொண்ட உத்தேசத்தைக் கைவிட்டோடிவிட்டன என்று பிரித்தானிய கடற்படையார் தெரிவித்தனர்

குவீன்மேரி என்ற கப்பலிலிருந்த காலுபேர்த்தா உத்தியோகஸ்தர் காக்கப்பட்டனர் மற்றெல்லோருஞ் சேதமாயினர் இன்வின்சிப்பிள் என்ற குருசரிலிருந்தவர்களில் அதன்தலைமைஉத்தியோகஸ்தரும் வேறொருவருங் காக்கப்பட்டனர் மற்றெல்லோருஞ் சேதமாயினர் இண்டிபெடிக்பிள், டிபென்ஸ, பிளாக்பிரின்ஸ் என்ற கப்பல்களிலிருந்த யாவருஞ் சேதமாயினர் வாரியர் என்றகப்பலிலிருந்த உத்தியோகஸ்தர் யாவருங் காக்கப்பட்டனர்

3ஆ வெஸபேலன் ரெட்னட்கப்பல்சேதமடைந்ததைச் செர்மனியர் ஒப்புக்கொள்ளுகிறார்களென்று தடுத்தறிந்த தந்தியால் தெரியவருகிறது

விஸ்பேடன் என்னும் சிறிய குருசர்க்கப்பலும் பாம்பெர்ன் என்னும் சிறியகுருசர்க்கப்பலும் சேதமாயினவென்றும் பிசாவென்லாப் என்னும் குருசர்கப்பலும் இன்னுஞ்சில டொர்பிடோப்படகுகளுங் காணப்படவில்லையென்றும் மூழ்கடிக்கப்பட்ட இண்டிபெடிகேபின் என்னும் பிரித்தானிய சண்டைக் குருசரிலிருந்து இருவரை மாத்திரம் செர்மனியர் சலத்திலிருந்து தூக்கிவிட்டதாயும் மூன்று பிரித்தானிய டிஸ்திரோயர்க் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டனவென்றும் செர்மனிய அறிக்கை சொல்லுகிறது

காயமடைந்தவர்களையும் மாண்டுபோனவர்களையும் ஏற்றிக்கொண்டு நெல்லாந்தகப்பல்கள் றாட்டர்டாம் முதலியவிடங்களுக்குச் செல்லுகிறது

தென்மார்க்கின் மேற்கரைக்காப்பால் இரண்டு செப்பிளின்கள் சேதமடைந்துபோனதாய்த் தெரிகிறது

புதன்கிழமை இரவு 10 செர்மன் டிஸ்டிரோயர்கள் மொதுவாய்த்தென் திசையை நோக்கிச்சென்றனவென்றும் ஒன்றுவேறொன்றால் கட்டி இழுத்துக்கொண்டு போகப்பட்டனவென்றுந் தெரிகிறது

சண்டையில் வாலியெண்ட், பெர்காம், மலேயா, வால்ஸட் என்ற நான்குகப்பல்கள் வந்துசேரவே சண்டை மறுபுறந்திரும்பிவிட்டது சத்துருக்கள் தப்பியோடப் பிரித்தானியர் பொழுதுவிடிந்தபின் தமது இருப்பிடத்திற்குத் திரும்பி வந்து சேரும்படி நேரிட்டது

எல்பிங் என்னும் செர்மன்குருசர்க்கப்பலைச்சேர்ந்த 3 உத்தியோகஸ்தரும் வேறு 14 பேரும் சலத்திலிருந்து தூக்கியெடுக்கப்பட்டு சுமூய்டென் துறைமுகங் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார்கள் இக்கப்பல்மேல் வேறொருசெர்மன்கப்பல்மோதினதால் மூழ்கினதாய் அவர்கள் சொல்லுகிறார்கள் அவருளொருவர் தன் பீரங்கிப்பிரயோகத்தினாலேயே மூழ்கிற்றென்றார்

4உ செர்மனியர் இரண்டு சண்டைக் குருசர்க்கப்பல்கள் சேதமானதை ஒத்துக்கொள்ளுகிறார்கள் ஆறு டிஸ்டிரோயர் சேதமானதையும் ஒத்துக்கொள்ளுகிறார்கள் செர்மனியருக்கு அதிகசேதம் நேர்ந்திருக்கலாம் செப்பினின்கள் சரியானவேலைசெய்யவில்லை நின்ற சொற்பநேரஞ் சண்டைசெய்து சேதமடைந்து பின்விட்டது

இக்கடற்சண்டையில் இண்டிபெடிக்கேபிள், டிபென்ஸ், பிளாக்பிரின்ஸ் என்ற மூன்றுகப்பல்களிலிருந்தவர்களையுஞ்சேர்த்து 333 பேர் கொல்லப்பட்டார்களென்றும் குயின்மேரிக்கப்பலிலிருந்த உத்தியோகஸ்தரில் நால்வரும் இன்வின்சிபின் கப்பல் உத்தியோகஸ்தர் இருவருமே உயிர்தப்பினர் என்றும் குயின்மேரி, இன்வின்சிபின், பார்சிறுன், ஆர்டெண்ட், ஷார்க் ஆகிய ஐந்துகப்பல்களிலிருந்து 43 பேர் இரட்சிக்கப்பட்டார்கள் என்றும் அவர்களில் 8 பேர் காயமடைந்தார்கள் என்றும் இண்டிபெடிகேபிள், டிபென்ஸ், பிளாக்பிரின்ஸ், டிப்பரேரி, டர்பியூலெண்ட், நோமாட், நெஸ்டார் ஆகிய இக்கப்பல்களிலிருந்த ஒருவருந் தப்பவில்லையென்றும் வாரியர் கப்பலிலிருந்த 63 பேர் மாண்டு 27 பேர் காயமடைந்தார்களென்றும் மற்றக்கப்பல்களில் 115 பேர் மாண்டு 73 பேர் காயமடைந்தார்களென்றும் கடற்சண்டையிலிருந்து இதுவரையில் 250 உத்தியோகஸ்தரும் 230 வேலைகாரருஞ் சேதமாயினரென்றுங் கடற்படைப்பகுதி தெரிவித்திருக்கிறது

பின்வந்த செய்திப்படி செர்மனியர்சொல்வது தப்புச்சமாச்சாரம் அவர்களுக்குச் சேதம் அதிகமாயிருக்கும் 2 யுத்தக்கப்பல்களும் 2 பெட்ளெட் சண்டைக் குருசர்களும் புதிய 2 குருசர்க்கப்பல்களும் வேறோர் சிறக்குருசரும் குறைந்தளக்கு டிஸ்டிரோயர்க்கப்பல்களும் ஓர் சப்மரினும் ஆகிய 18 கப்பல்கள் சேதமாயிருக்கவேண்டும் நமக்குச் சேதம் 14 கப்பல்கள்தான் அதாவது 3 சண்டைக் குருசர்க்கப்பல்களும் 3 குருசர்க்கப்பல்களும் 8 டிஸ்டிரோயர்க்கப்பல்களுந்தான். நமது கப்பல்கள் செர்மனிய கப்பற்படையைப் பின்னடைந்து செல்லும்படி துரத்திவிட்டுச் சண்டைநடந்த ஸ்தலத்தைச் சோதித்துவிட்டுத் தமதிருப்பிடஞ் சேர்ந்தன என்று தெரிகிறது.

